Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம்: தமிழ் மொழி

வாரம் - 2

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியர் R.யசந்தன்
கே/ உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

**பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக**

1. ‘மக்கள் உயரநலமுறுவதற்கு இலட்சியம் கருவியாக அமைகின்றது’ இங்கு இலட்சியம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.

   I. குறிக்கோள் II. பரிதானம் III. இடையூறு IV. இலாவணியம்

2. ‘இலட்சியம் நம் பின்னோரையும் ஈடேற்றும் என்பதில் ஐயமில்லை’ இங்கு ஐயம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.

   I. பயம் II. வதந்தி III. உண்மை IV. சந்தேகம்

3. ‘நல்லறங்களை வகுத்தோதிய மாண்பும் நாம் அறிந்து கொள்ளற்குரியதாகும்’ இங்கு மாண்பு என்பதன் ஒத்தகருத்துச் சொல்.

   I. இழிவு II. சிறப்பு III. வம்பு IV. அன்பு

4. ‘ஈகையில்லாதவனுக்கு அவர் பெற்ற செல்வமும் துன்பமாம்’ இங்கு ஈகை என்பதன் ஒத்தகருத்துச் சொல்.

   I. வட்டி II. படை III. கொடை IV. வணக்கம்

5. ‘ஈகையில்லாதவனுக்கு அவர் பெற்ற செல்வமும் துன்பமாம்’ இங்கு செல்வம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.

   I. நிதி II. பதி III. தூலம் IV. விச்சலம்

**சுருக்க விடை எழுதுக.**

**1).** “கொய்பூத் தைஇத் தண்கய மாடு மகளிரொடு கை பிணைந்து……..”

I. “தைஇ” என்பதன் பொருள் என்ன?

II. “கை பிணைந்து” என்பதன் பொருள் யாது?

**2).** “அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ தொடித்தலை விழுத்தண்டுன்றி……..”

I. இங்கு இடம் பெறும் உணர்வு யாது?

II. இது எந்நூலில் இடம் பெற்றுள்ளது?

**3).** “நெடுநீர் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து குளித்து மணற் கொண்ட கல்லாவிளமை……..”

I. இங்கு வாலிபத் துணிவு எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது?

II. ‘வாலிபத்துணிவை’ வெளிப்படுத்தும் பழமொழி ஒன்றை எழுதுக.